IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, RANIPET,
VELLORE DISTRICT.

04.02.2019

Case No. OS 211/2010 PW1 வெங்கடசாமி

கு.வி.

என் அப்பா புருஷோத்தமன் 1965ல் காலமானார். அப்போது எனக்கு 13 வயது. எங்கள் வீட்டில் 1ம் பிரதிவாதி பாஸ்கர் தான் மூத்தவர். என் அப்பா நெல் கமிஷன் மண்டி ஆரணி மண்டி தெருவில் வைத்திருந்தார். கதவு எண் தெரியாது. நெல்மண்டியின் உரிமம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. உரிமம் பற்றி தெரிந்துகொள்ள நான் முயற்சி செய்யவில்லை. எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை நெல் மண்டி வைத்திருந்தார் என்று என் வழக்கில் சொல்லவில்லை. என் அப்பாவிற்கு நிலம் இருந்தது பயிர் தொழிலும் செய்து வந்தார். நெல் மண்டி மூலமாக வருமானம் வருகிறது என்று வழக்கிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை.வா,சா.ஆ.2 ல் பயிர் புருஷேத்தமன் ரெட்டியார் என்று சொல்லப்பட்டுள்ளது. அதன் நகல் 2006ல் வாங்கியுள்ளேன். அவருக்கு பயிர் தொழில் மட்டும் தான் என்றால் பயிர் தொழில் செய்வார். பத்திரத்தில் எழுதியுள்ளது தான். மூதாதையர் சொத்து எவ்வளவு இருந்தது என்று எனக்கு தெரியாது. அப்போது எனக்கு 13 வயது. அதில் என்ன வருமானம் வருகிறது என்று எனக்கு தெரியாது. என் அப்பா இறக்கும் போது என் அண்ணனுக்கு 25, 26 வயது இருக்கும்.